**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 86/2020**

**Date :15.04.2026**

**வா.சா. 1 - பவுலின்மேரி**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

சர்வே எண் 758/33 ல் எனக்கு எவ்வித சொத்தும் கிடையாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் பட்டிகையில் சர்வே எண் 758/33 எனக்கும் எனது கணவருக்கும் உரிமைப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண் 738/33 அது தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண் 738/32 மற்றும் 738/33 ல் எனக்கு உரிமை உண்டு என்றால் சரிதான். 18.11.2012 அன்று எனது பெயரில் ஜெயராஜ் எவ்வித சொத்தும் எழுதி தரவில்லை என்றால் சரிதான்.

வழக்கு பட்டிகை சொத்தாக நான் குறிப்பிடப்பட்டுள்ளது சர்வே எண் 738/32 மற்றும் 738/33 மட்டும் தான் என்றால் சரிதான். பாதையும் வரும். மேற்படி பாதை எந்த சர்வே எண்ணில் இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி பாதை எந்த பக்கத்தில் உள்ளது என்றால் வழக்கு பட்டிகை சொத்திற்கு கிழக்கு உள்ளது. மேற்படி பாதை இருப்பது பட்டா நிலமா , புறம்போக்கு இடமா என்றால் புறம்போக்கு இடம். வாசாஆ 1 கிரைய ஆவணத்தின்படி எனக்கு என்ன சொத்து கிடைத்ததோ அதில் மட்டும் தான் எனக்கு அவகாசம் என்றால் சரிதான்.

வாசாஆ 1 கிரைய ஆவணத்தின் முன் ஜென்மியை யார் என்றால் சுயம்புலிங்கம். மேற்படி சுயம்புலிங்கத்திற்கு யார் சொத்தினை எழுதி கொடுத்தார் என்றால் பொன்னுமணி நாடாச்சி. வாசாஆ 1 ல் சுயம்புலிங்கத்திற்கு பொன்னுமணி நாடாச்சி சொத்தினை எழுதி

கொடுத்தார் என்ற விவரம் துலங்காது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி பொன்னுமணி நாடாச்சியிடமிருந்து சுயம்புலிங்கத்திற்கு எந்த சொத்து உரிமைப்பட்டதோ அதே சொத்து தான் சுயம்புலிங்கம் எனக்கு எழுதிகொடுத்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

வாசாஆ 1ல் சொத்தின் பட்டா முன்ஜென்மிகளான இருளப்ப நாடார், நடுவன் நாடார், நாராயண நாடார் ஆகியோர்கள் பெயரில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வாசாஆ 1 மொத்தப் பக்கங்கள் 6 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 1ல் 7-ம் பக்கம் சார் பதிவாளர் கையொப்பம் இல்லாமல் சம்மந்தமில்லாமல் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ 1ல் 7ம் பக்கம் சார் பதிவாளர் கையொப்பம் இல்லை பதிவு செய்யப்படாத பக்கம் என்றால் சரிதான். வாசாஆ 7 ஆவணம் 10.01.2025 தேதியில் பட்டா உட்பிரிவை மாற்றம் செய்ய வேண்டி அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

மேற்படி வாசாஆ 12 செட்டில்மெண்ட் ஆவணம் ஜெயராஜ் என்பவர் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். சர்வே எண் 740/48 அல்லது 740-ல் உள்ள எந்த உட்பிரிவிலோ எனக்கு உரிமையோ அவகாசமோ கிடையாது என்றால் சரிதான். சர்வே எண் 738/32 -ற்கு எனது பெயரிலோ எனது கணவர் பெயரிலோ தீர்வை ரசீதோ பட்டாவோ இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ 4 கூட்டு பட்டாவில் இருளப்பன் நாடார் மகன் நடுவன் நாடார், எனது கணவர் பெயரில் கூட்டு பட்டாவாக தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாசாஆ 4 பட்டா 738/33-ற்கு தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி நான் கூறிய புறம்போக்கு பாதைக்கான வருவாய்த்துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பாதை எங்கு தொடங்கி எங்கு

முடிகிறது அதன் நீளம் அகலம் மற்றும் அதன் விஸ்திரணம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி பாதை சம்மந்தமாக தோராய வரைபடம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வழக்கு பட்டிகை சொத்தின் 4 பக்க எல்கைகள் உரிமையாளர்களின் பெயர் எனக்கு தெரியாது ஆகையால் தான் சர்வே எண் மட்டும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தினை தவிர சர்வே எண் 738/32 மற்றும் 738/33 யை தவிர வாசாஆ 1 யை தவிர எனக்கு எவ்வித சொத்தும் கிடையாது என்றால் சரிதான். வாசாஆ 7 வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தமாக அஞ்சுகிராமம் காவல் நிலையத்தில் ஒரு முகவர் மூலமாக நான் கொடுத்த புகார் என்றால் சரிதான். அதற்கான ரசீது வாசாஆ 8 என்றால் சரிதான். வாசாஆ 7 சர்வே எண் 738 ல் பாதை அவகாசம் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு வழக்கு பட்டிகை சொத்து எங்கு உள்ளது எனபது குறித்து எனக்கு தெரியாது. நான் தவறுதலாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

வாசாஆ 2 வரைபடத்தில் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் 738/32 மற்றும் 738/33. வாசாஆ 2 வரைபடத்தில் குறிப்பாக அருகில் உள்ள சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாததால் குறிப்பிடப்படவில்லை என்றால் தேவையில்லை. வழக்கு பட்டிகை சொத்தில் கேத்தன் நாடார் மற்றும் ஷைலேஷ் நாடாருக்கு சர்வே எண் 738/32 மற்றும் 738/33 ஆகிய நிலங்கள் உரிமைப்பட்டதாக ஒரு போர்டு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விவரத்தை நான் வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் தேவையில்லை. வழக்குரையில் 1ம் பரிகாரமாக பாதைக்கு Easement by grand and easement by prescription என்று உரிமைக் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரிதான். மேற்படி பாதைக்கு Easement by grand and easement by prescription என்று கோரிய பரிகாரம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு காலம் தாழ்த்தி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேலும் பிரதிவாதிகள் எவ்வித கட்டுமானமும் கட்டாததால் நான் கேட்டுள்ள செயலுறுத்து கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை நிலம் விவசாய நிலமாக இருந்தது என்றால் சரிதான். மேற்படி நிலத்தை வாங்கி நான் அடுக்குமாடி கட்டிடம் கட்டுவதற்காக 2 பக்கமும் பாதை இருந்தால்தான் கட்ட முடியும் என்பதால் பிரதிவாதிகளை கஷ்டப்படுத்தி 1ம் பிரதிவாதியின் நிலத்தை அபகரித்து எடுக்க வேண்டி திட்டமிட்டு தாக்கல் செய்த வழக்கு என்றால் சரியல்ல. சர்வே எண் 740/40 மற்றும் 740/41ல் உள்ள சொத்து 1ம் பிரதிவாதியின் கணவர் ஜெயராஜ் என்பவர் நீண்ட காலம் இரானுவத்தில்ர பணிபுரிந்த காலத்தால் ஓய்வு பெற்ற பின்பு அரசு பரிந்துரை பிரகாரம் அவருக்கு வழங்கப்பட்டு அதன் ஒரு பகுதியை அவருடைய மனைவி 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மென்ட்டாக எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை கஷ்டப்படுத்தும் நோக்கில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**</u>